பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை-28.

சுற்றறிக்கை

எண்.18223/சி1/2013-3, நாள் 8.11.2013.

பொருள் : போலி ஆவணப்பதிவு தவிர்த்தல் – அறிவுரை வழங்குதல் தொடர்பாக.

----

ஆள்மாறாட்ட பதிவுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் பொருட்டு I.P. Camera, web Camera, Bio-metric வழிமுறைகள் பதிவு அலுவலகங்களில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மோசடி ஆவணப்பதிவுகளை தவிர்த்திடும் பொருட்டு, பார்வையில் காணும் பதிவுத்துறைத்தலைவர் சுற்றறிக்கைகளின் தொடர்ச்சியாக, கீழ்க்காணுமாறு செயல்பட பதிவு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

பதிவிற்கு ஆவணம் தாக்கல் செய்யும் ஆவணதாரர் தாம் அவ்வாவணத்தை எழுதிக் கொடுப்பதற்கான உரிமையை நிலை நாட்டும் வண்ணம் ஆவண தாக்கலுக்கு முந்திய 10 நாட்களுக்குள் பெறப்பட்ட வில்லங்கச்சான்றுடன் ஆவணங்களை தாக்கல் செய்ய பதிவு அலுவலர் வலியுறுத்த வேண்டும். மேற்படி வில்லங்கச்சான்றின்படி கடைசியாக கிரையம் பெற்ற/உரிமை பெற்ற நபரால்தான் அவ்வாவணம் எழுதி தரப்படுகிறது என்பதை பதிவு அலுவலர் உறுதி செய்ய வேண்டும்.

அவ்வாறு வில்லங்க சான்றில் உள்ள நபரும் தற்போது ஆவணம் எழுதி தருபவரும் வெவ்வேறு நபராக இருப்பின், தற்போது ஆவணம் எழுதி தரும் நபருக்கு சொத்து எவ்வாறு தொடர்புடையது என்பது குறித்து ஆவண வாசகம், மற்றும் வாரிசுரிமை முதலிய விவரம் தக்க ஆதாரங்களுடன் நன்கு பரிசீலித்து திருப்தி அடைந்த பின்னரே, ஆவணப்பதிவு மேற்கொள்ளப்படவேண்டும்.

ஒம்/....8/11/2013
பதிவுத்துறைத்தலைவர்.

/ஆணையின்படி/

11.11.2013
பதிவுத்துறைத்தலைவருக்காக

பெறுநர்
அனைத்து சார்பதிவாளர்கள்,
நகல் : 1.அனைத்து துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள்.
2.அனைத்து மாவட்ட பதிவாளர்கள்,
3.இயக்குநர், பதிவுத்துறை பயிற்சி நிலையம்,சென்னை

Scanned with OKEN Scanner